

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## எனக்காக யாவையும் செய்து முடிப்பார்!

ஒரு சூழ்நிலை அல்லது ஒரு தேவையில் ஏற்படும் துயரத்தை இந்த உலகில் பணமோ அல்லது எந்த மானிடரோ "உனக்காக **யாவையும்** செய்து முடிப்பேன்" (சங்.138:8) என நமக்கு கூறிட இயலாது! நம் கர்த்தர் ஒருவரே அவ்வாறு கூற வல்லவர்! அவருடைய கிரியையில் சில தாமதமோ அல்லது தடங்கலோ ஏற்படுவதுபோல் நாம் எண்ணும் நேரத்தில் "கர்த்தாவே உம் கரத்தின் கிரியைகளை நெகிழ விடாதிரும்!" (வசனம்:8) என விசுவாசத்துடன் ஜெபிக்கும் உரிமையை நாம் பெற்றிருப்பதும் நமது பாக்கியம்.

இந்த பாக்கியத்தை நாம் பெற்றதற்கு ஆதாரம் ஒன்று உண்டு! அதுவே, முதல் வசனமாயும் உள்ளது: மானிடர்களுக்கு 'அனேக தேவர்கள்' உண்டு! அது, பணமோ, ஆஸ்தியோ, உதவி என நம்பும் மானிடரோ.... இவ்வாறு அனேக தேவர்களின் முன்னிலையில், நாமோ "முழு இருதயமாய்" என் **தேவனாகிய கர்த்தர் ஒருவரே, எனக்காக யாவையும் செய்து முடிப்பார்!** என கெம்பீரித்து ஸ்தோத்தரிக்கிறோம்! (சங்.138:1). ஆகவே, எவ்வித இன்னல் நேரத்திலும் அவரது கரத்தின் கிரியை ஒன்றையே நோக்கி காத்திருக்கிறோம்! அல்லேலூயா. *-tr*

பெட்டகம் 39 ஜூலை 2023 பரல்கள் 07



# ‘மனுஷீக’ இருள் அகற்றும் சபை வேண்டும்!

பரிசுத்தாவியின் மிகச் சிறந்த ஆர்வம் என்னவென்றால், “வாஞ்சையுள்ள எந்த இருதயத்தையும் ஊடுருவிச் செல்வதுதான்!” அவர், சபையில் வாஞ்சையுடன் அமர்ந்திருப்போரின் மனதை ஊடுருவிச் செல்வார்! ஆவியில் ஊடுருவிச் சென்று ‘மனுஷீக ஆவியை’ அகற்றுவார்! ‘மனுஷீக ஆவி’ மானிட இருதயத்தில் வாசம் செய்யும் வெற்றிடமான ஆவியாகும். அதில் மனுஷீக போட்டி, பொறாமை, பிரிவினை.... வாசம் செய்யும் இருளை அகற்றி, ‘தேவனை’ ஜனங்களின் இருதயத்தில் கொண்டு வரும் கிரியை, சபையில் எப்போதும் நடந்துகொண்டே இருக்க வேண்டும். பரிசுத்தத்திற்கு உண்டாகும் கேட்டை, ஆவியானவர் அந்த சபையில் நிரந்தரமாய் எதிர்த்து நிற்பார்.

**ஒரு பாவ மனிதனை சபையில் மனம் குளிர வைத்துப் பாருங்கள்,**
**அதுபோதும்.... ஒளி சபையிலிருந்து விரட்டப்படும்!**

இதுபோன்ற சபையின் நிலைமையைக் குறித்து தேவன் சொல்லி முடியாத வேதனை அடைவார்! பாவத்திற்கு அநேக பக்கங்கள் உண்டு. அது ஏராளமான நோய்களைத் தாங்கியிருக்கும் ஒரு மனிதனைப்போல் உள்ளது. அந்த நோயாளியை அந்த பாவம் கொன்றுவிடும் என்பது மாத்திரம் இருந்தால் ஒன்றுமில்லைதான்..... ஆனால், அந்த பாவ மனிதன் மூலமாய் தோன்றும் முரட்டாட்டங்கள், மாறுபாடான நடக்கைகள், மீறுதல்கள் ஆகிய அனைத்தும், விலையேறப் பெற்றவைகளையும் (உண்மை சீஷர்களையும்) பாதிக்கச் செய்யும் என்பதை சபை அறிந்திருந்து விழிப்பாய் செயல்பட வேண்டும்.

*-Ed*

## 2023 ‘பரலோக பொக்கிஷங்கள்’ சந்தா புதுப்பிக்கவும்

வருட சந்தா ரூ.**170/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **ஜூலை 10-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**140/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**950/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **‘புதிது’** என்று குறிப்பிடவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 9843049935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## 'ஜெபத்திற்கு அர்ப்பணித்தவனே' தேவனுக்கு தேவை!

*ஜெபத்தில் 'இரும்பு கதவுகளும்' தானாய் திறக்கும்*

*ஒரு சமயம், பேதுரு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு, சிரச்சேதம் பண்ணப்படும் நாளுக்காக வைக்கப்பட்டிருந்தார். அப்போஸ்தலர் 12:5 இதைக் குறிப்பிட்டு, "பேதுரு சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டிருந்த வேளையிலே,* **சபையார் அவருக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள்**" *என வாசிப்பது, ஆச்சரியமான ஒரு செயலாகும். அன்று, சபை உபத்திரவ குகைக்குள் சென்றபோது, சபையை காப்பதற்கு பூமிக்குரிய உதவி ஒன்றுகூட இருக்கவில்லை அல்லது பேதுருவை விடுவிக்க ஒரு மனிதனின் தயவும் இருக்கவில்லை!*

**இவ்வாறு அவர்களைச் சுற்றியிருந்த எல்லா உதவியின் கதவுகளும் பூட்டப்பட்ட நிலையில், பரலோக வாசல் வழி ஒன்றே, உதவிக்காக திறக்கப்பட்டிருந்தது!**

*ஆகவேதான், சபையார் ஊக்கமான ஜெபத்தை இடைவிடாது செய்து கொண்டேயிருந்தார்கள். அந்த நாளில், தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, தூங்கிக் கொண்டிருந்த பேதுருவை தட்டி எழுப்பினார்! முதலாம் காவலையும், இரண்டாம் காவலையும் அந்த தூதன் கடந்து வரச்செய்து, சிறைச்சாலையின் இரும்பு கதவண்டையிலே வந்தபோது* **'அது தானாய், அவர்களுக்கு திறவுண்டது!'** *ஆம், பேதுரு மெய்யாகவே விடுவிக்கப்பட்டார்! (அப்போஸ்தலர் 12:10).*

*அன்பானவர்களே, உங்கள் ஜீவியத்தின் பாதையையும் சில இரும்பு கதவுகள் தடையாக வந்து உங்களை அடைத்து வைத்திருக்கலாம். ஒரு கூண்டில் அடைபட்ட பறவை, அதிலிருந்து வெளியே வர தன் இறக்கைகளை அடித்து படபடத்து, யாதொரு உதவியும் கிடைக்காமல் கூண்டிற்குள்ளேயே சோர்வடைந்து விழுந்து கிடக்கிறது. அதன் இருதயமும் சோர்வினால் பெலவீனப்பட்டது. இங்குதான் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு இரகசியம் உள்ளது! ஆம்,* **"விசுவாசித்து ஜெபிப்பது ஒன்றே"** *அந்த மேலான இரகசியமாகும்! இடைவிடாது ஜெபத்தில்*

*முன்னேறிச் சென்று, உங்களை அடைத்து வைத்த "இரும்பு கதவருகே வந்தவுடன்" அது தானாகவே திறப்பதைக் கண்டு ஆச்சரியமடைவீர்கள்.*

**அன்று சபையில் ஜெபித்த விடுதலையின் இரகசியத்தை நீங்களும் கற்றுக்கொண்டிருந்தால் எவ்வளவு நலமாய் இருந்திருக்கும்! நீங்களாக கூண்டிற்குள் சிறகடித்துப் படபடத்த, உங்களின் சக்தி வீணாகாமல் இருந்திருக்குமல்லவா!**

*விசுவாச ஜெபத்தின் வலிமையினால் 'வெளியே தப்பி வரமுடியாத' கடின சூழ்நிலை மாயமாய் மறைந்துவிட்டதே! நீங்கள், உங்களை சார்ந்து கொள்ளாமல்,* **தேவனை மாத்திரமே விசுவாசித்து சார்ந்து கொண்டால்** *எவ்வித பாதகமான சூழ்நிலையும் உங்களுக்கு நலமாகவே மாறும் என்பதை நிச்சயமாய் அனுபவிப்பீர்கள்! (மாற்கு11:22). சிறைப்பிடிக்கப்பட்ட ஆத்துமாக்கள், பல வருடங்களாய், கதவு திறக்கப்படவில்லையே? என, ஏன் காத்திருக்க வேண்டும்! கிறிஸ்துவுக்கு பிரியமானவர்கள் கூட, சாத்தானால் கட்டப்பட்டிருக்கும் வேளையில், 'விடுதலையின் இரகசியமாகிய,* **தேவனை விசுவாசித்து ஜெபிக்கும் ஜெபத்தில்**' *ஊக்கமாய் நிலைத்திருந்தால், விடுதலை பெறும் பாக்கியத்தை அடைந்திருப்பார்களே?*

*கைவிடப்பட்ட வேளையில், ஊக்கமான ஜெபமே நமது 'அவசர உதவியாய்'* (Emergency Call) *இருக்கிறது! 'நீங்களே ஜெப மனிதனாய் மாறும்போது' ஜெபத்தின் வலிமையான கிரியையை ஒருவராலும் தடை செய்ய முடியாது. அன்று கர்மேல் மலையில், எலியா முழங்கால்படியிட்டு தன் முகத்தை முழங்கால் நடுவே குனிந்து தரைமட்டும் வைத்துக்கொண்டான்!* **இதுவே ஜெபம்.... ஆம், அந்த மனுஷனே, ஜெபமாய் மாறிவிட்டார்!** *அன்று எலியா என்ற ஒரு மனிதனின் முழுமையும், தேவனை தொட்டுவிட்டது!*

*ஆகவே, தேவனோடு இணைந்த அந்த உறவில், தீமையின் வல்லமைகள் அனைத்தையும், இந்த ஒரு மனிதனின் ஜெபத்தால், எதிர்கொள்ள முடிந்தது! இந்த ஜெப மனிதனுக்கு முன்பாக, தீயோர் கூட்டம் நிலைநிற்க முடியவில்லை. இன்றும், ஜெபத்தில் தன்னை முழு அர்ப்பணமாய் தந்து, ஜெபிக்கும் மாந்தரே தேவனுக்குத் தேவை! C.H.ஸ்பர்ஜன் கூறும்போது, "ஜெபத்தில் தன்னை முழுமையாய் வைத்து சாய்ந்து கொண்ட மனிதனின், வாக்குக்கடங்காத பெருமூச்சுகள்" தேவனால் ஒருபோதும் மறுக்கப்பட்டதில்லை! என்றே நேர்த்தியாய் கூறினார்.*

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

## எத்தனை குற்றம் சாட்டினாலென்ன? நீங்கள் பாதிக்கப்படகூடாது!

*பிறரை குற்றம் சாட்டாத தாழ்மை வேண்டும்*

*ஒருசமயம் யாரோ ஒருவர் சாக்ரடீஸிடம் வந்து, "இன்னார் உங்களைஇன்னவிதமாய்தாக்கிப் பேசிவிட்டார்களே.... இப்போதாவது நீங்கள் மனம் புண்பட்டிருப்பதை ஒத்துக்கொள்வீர்களா?" எனக் கட்டாயப்படுத்தி கேட்டார்! ஆனால் சாக்ரடீஸோ அதற்கு நிதானமாய் "அப்படியொன்றும் இல்லை!" என்றும் "அவர் பேசியிருந்தால்..... அது எனக்கென்ன?" என்றும் பதில் கூறினார். சாக்ரடீஸின் பதில் உங்களுக்கு விளங்குகின்றதா? "யாரோ சிலர் பேசியது, அவர்கள்தான் அதைப் பேசினார்கள், சாக்ரடீஸ் பேசவில்லையே?" என்பதே அவருடைய பதிலின் விளக்கமாகும். நாம் ஏதாகிலும் தவறு செய்தால் மாத்திரமே, அது நம்மை மகிழ்ச்சி குன்றச் செய்திடும்!*

**எனவே, சாக்ரடீஸைக் குற்றப்படுத்திப் பேசியவர் எவரோ அவர்தான் இப்போது மகிழ்ச்சியற்றவர்! என்ற சத்தியத்தை உணர்த்தினார்!**

*ஆம், அது ஒன்றும் தன்னைப் பாதிக்கவில்லை என்பதே சாக்ரடீஸின் தீர்க்கமான பதிலாய் இருந்தது! 'கிறிஸ்துவுக்கு முன்பாக' வேதப்புத்தகம் இல்லாமலே, சாக்ரடீஸ் அறிந்துகொண்ட சத்தியத்தை, இன்று சபையில் உட்கார்ந்திருக்கும் கிறிஸ்தவ சகோதர சகோதரிகளில் எத்தனைபேர் இந்த சத்தியத்தை மனதார அறிந்திருக்கிறார்கள்?*

**என்னைக் குறித்து யாரோ பேசிய வார்த்தைகளுக்கும், நான் தேவனோடு கொண்டிருக்கும் நெருங்கிய தொடர்புக்கும் எந்த சம்பந்தமும் இல்லவே இல்லை!**

*யார் என்ன பேசினாலும் அல்லது எண்ணினாலும், தேவனோ* **தாழ்மையுள்ளவர்களுக்குத்** *தன் கிருபையைத் தந்துகொண்டேதான் இருப்பார்! நான் இந்நிலையில் எப்போதும் தங்கியிருந்தால், தேவனே என்னைக்குறித்த காரியங்களைப் பொறுப்பெடுத்துக்கொள்வார்.... நானோ, சதா மகிழ்ச்சியில் திளைத்திருப்பேன். ஆம், என்னைக் குறித்தோ அல்லது வேறெதைக்குறித்தோ குற்றம் கூறி நியாயந்தீர்ப்பவர்களே மகிழ்ச்சியற்றவர்கள்! பிறரை நியாயந்தீர்ப்பதும், குறைசொல்லுவதும் கண்டிப்பாய் தடைசெய்யப்பட வேண்டியதொன்றாகும். ஏனென்றால் இவ்வித இழிசெயல் நமக்கு ஒருக்காலும் சந்தோஷத்தைக் கொண்டுவரவே முடியாது. ஆனால், பிறரை குற்றம் சாட்ட மறுக்கும் தாழ்மையுள்ளவர்களுக்கு, தேவன் அருளிச் செய்யும் கிருபையை நான் பெறுவது, என்னை ஓயா மகிழ்ச்சியில் வைத்திருக்குமே!*

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

## ‘கிறிஸ்தவனின் உறுதி தன்மையை’ உலகம் அறியாது!

*தெய்வ நேசமே கிறிஸ்தவனின் பெலன்*

மெய்யாகவே **இரட்சிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவன்,** எப்போதும் பிரகாசமான மகிழ்ச்சியோடிருப்பான். தான் தொடர்ச்சியாய் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது அவனுக்குத் தெரியும்! ஆகிலும், அவனது உறுதியான நடையோ ‘கடைசி நாளில் வெளிப்படும் இரட்சிப்பை’ கண்ணோக்கியதாயிருக்கும்! இந்த விசுவாச மேன்மையை மனுஷீக கிறிஸ்தவர்களால் புரிந்து கொள்ள முடியாது. அதை அவர்கள் ‘கண் மூடித்தன விசுவாசம்’ என பரிகசிப்பார்கள். உறுதித்தன்மையற்ற மற்ற கிறிஸ்தவர்களைப்போல் இல்லாமல், நீங்கள் ஒரு உண்மை கிறிஸ்தவன் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை!

இந்த பூமியிலிருந்து இரட்சிக்கப்பட்டு, மறுபிறப்பு அடைந்த ஒரு கிறிஸ்தவன் ‘அவன் இன்னமும் பிரவேசியாத’ வேறொரு தேசத்திற்குரிய குடிமகன் என்ற உண்மையும் மாம்ஷீக கிறிஸ்தவர்களுக்குப் புரியாது!

**இந்த பூமியில்தான் அவன் முதலாவது பிறந்தான்! ஆகிலும், தான் பெற்ற விசுவாசத்தைக் கொண்டு, அவன் இந்த பூமியில் வாழ்ந்தாலும், தான் ஒரு “பரம தேசத்தின் குடிமகன்” என்ற உறுதியை, தன் விசுவாசத்தைக் கொண்டு அறிந்திருப்பான்.**

வேதாகமும், மிக சாதாரண எளிய நடைமுறையில் “நாம் இந்த பூமியில் நடந்தாலும், உன்னதங்களிலே அவரோடு உட்காரவும் வைத்திருக்கிறார்” (எபேசியர் 2:7) என்ற விசுவாசத்தில், உறுதி கொண்ட அவனே உண்மை கிறிஸ்தவன்! அவ்வித உறுதித்தன்மை ‘ஏதோ ஒரு ஆரவார ஜெபக்கூட்டத்தில்’ ஏற்பட்டதல்ல. ஒப்பற்ற தன் ஸ்தானத்தை ‘விசுவாசத்தினால்’ நன்கு அறிந்திருப்பவன். இதுபோன்ற கிறிஸ்தவன் ‘பொழுது போக்காய் வாழும் கிறிஸ்தவர்களுக்கு’ விநோதமும் பரிகாசமுமாய் காணப்படுகிறான்!

மேலும், ஒரு மெய்யான விசுவாசி, தன்னை இரட்சித்த கர்த்தரிடம் “கர்த்தாவே, நான் ஒன்றுமில்லை!” என அறிக்கை செய்கிறவனா யிருந்தாலும், **தான் தேவனுடைய கண்ணின் மணியாய் இருப்பதையும் அறிந்திருப்பான்!** ஒரு சிலர் “நீங்கள் தேவனோடு இணைந்திருப்பதை மேன்மை பாராட்டும் பெருமைக்காரர்கள்” எனக்கூறுவதைக் கேட்டிருக்கிறேன்! ஆனால், உண்மை என்னவென்றால் தன்னை தேவனோடு இணைத்துக் கொண்ட அந்த மெய் விசுவாசி, தேவனைப் போலவே தன்னலமற்று வாழ்வான்! தன் கர்த்தாவின் ஊழியத்திற்கு தியாகமாய் கொடுப்பான்! தன் குமாரர் குமாரத்திகளையும்

*தன்னைப்போலவே சுவிசேஷப் பணிக்கு மகிழ்ச்சியுடன் அனுப்பி வைப்பான்! தன் கர்த்தரைப்போலவே, பூமியிலுள்ள கடையாந்தரம் மட்டும் நடந்து, தேவ பணி செய்வான்! ஏனென்றால், தான் கர்த்தரோடு இணைந்த* **'அவருடைய கண்மணி'** (Apple of God's Eye) *என உணர்ந்திருப்பான்!*

*மேலும், இந்த உத்தம விசுவாசி தான் ஒருபோதும் காணாத தேவன் மீது சொல்லி முடியா அன்பும் பாசமும் கொண்டிருப்பான்! அவன் அளவிற்கடங்காத தெய்வ பயம் கொண்டு வாழ்ந்தாலும், தன் தேவனிடத்தில் சிறிதேனும் அச்சமில்லாதிருப்பான்! இன்றுள்ள அநேக தத்துவ மேதைகளோ தேவனுக்குப் பயந்து வாழ்வதை ஏதாகிலும் ஒரு விதத்தில் பரிகசிக்கிறார்கள்!*

**ஒரு மெய் விசுவாசி தன் தேவனுக்குப் பயந்து அவருக்கு முன்பாக நடுங்கி வாழ்ந்தாலும், அவரிடத்தில் முழு விசுவாச நிச்சயத்தோடு கிட்டிச் சேர்ந்து வாழ்வான்!**

*இவ்வாறு தெய்வ பயத்தோடு தேவனை கிட்டிச் சேர்ந்து வாழ்வது "விசுவாசமும் அன்புமென" வேதம் குறிப்பிடுகிறது. இந்த பரிசுத்த - முரண்பாட்டை இந்த உலக சித்தாந்தவாதிகள் ஏற்றுக்கொள்வதில்லை.*

*பல நூற்றாண்டுகளைத் தொடர்ந்து 'மெய் கிறிஸ்தவர்கள்' இந்த உலகத்திற்கு ஓர் புதிராக அல்லது ஒரு பைத்தியமாகவே தோன்றுகிறார்கள்! ஆதாமிய சந்ததியாருக்கு 'மாம்சத்தில் ஒரு முள்ளாக' காணப்படுகிறார்கள்! தூதர்களுக்கு வேடிக்கையாக பார்க்கப்படுகிறார்கள்! ஆகிலும், தேவனுக்கோ மனமகிழ்ச்சியும் பரிசுத்த ஆவியின் வாசஸ்தலமாய், அழகுபட காட்சியளிக்கிறார்கள்! இந்த உலகில் உள்ள மெய்யான கிறிஸ்தவர்கள் அனைவருமே* "**தேவனுடைய பிள்ளைகளாய் இணைந்திருக்கும் ஐக்கியம்**" *ஆச்சரியமாகும்! அது ஏனென்றால், தெய்வீகமான அந்த ஐக்கியத்திலுள்ள அவருடைய பிள்ளைகள், யார்? எவ்விடத்தார்? எவ்வித அந்தஸ்து கொண்டவர்கள்? என்ற வேறுபாடு அவர்களுக்குள் இருப்பதில்லை. அவர்கள் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டிருந்தால்! ஆவியின் அபிஷேகம் பெற்றிருந்தால்! தேவனோடு சஞ்சரித்து வாழ்பவராயிருந்தால்! இயேசுவின் உயிர்த்தெழுதலில் ஒவ்வொரு நாளும் பங்கடைந்து ஜீவிப்பவராயிருந்தால்! இனி வரப்போகும் நித்திய நம்பிக்கையில் எப்பொழுதும் மகிழ்ச்சி கொண்டவராய் இருந்தால்!..... அது யாராய் இருந்தாலென்ன? எவராய் இருந்தாலென்ன? அவர்கள் அனைவரோடும் இந்த மெய் கிறிஸ்தவன் தூய்மையான ஐக்கியத்தை நிரந்தரமாய் கொண்டு வாழ்வான்! ஆமென்.*

*- A.W.டோசர்*

## ‘கர்த்தரின் கட்டளையில்லாமல்’ நீண்ட உரையாடல் தவறு!

*கர்த்தரின் கட்டளை எதுவோ, அதுவே நம் பங்கு*

என் மகளுக்கு ‘அம்மை நோய்’ தாக்கியது. ஜெனிவாவிலிருந்து வந்திருந்த ஒரு மருத்துவர், மருத்துவ உதவி செய்தார். அவளுக்காக ஜெபிக்கும்படி தந்தை லா - கோம்பே அவர்களும் வந்து ஜெபித்து ஆறுதல் செய்தார்கள். அந்த அம்மை நோய் ஒரே நாளில் என் மகளை விட்டு ஆச்சரியமாய் விலகியது. கர்த்தர் இவ்வித ஆறுதலை எனக்குத் தந்தபோதிலும் **‘புதிய கத்தோலிக்க நிறுவனத்தார்’** எனக்கு கொடுத்து வந்த துன்பங்களை இன்னும் அதிகமாய் செய்யத் தொடங்கினார்கள்! ஆகிலும், அதனிமித்தமாய், அவர்கள் எல்லோருக்கும் நான் செய்து வந்த நன்மைகளை நிறுத்திக்கொள்ள இடம் தரவில்லை. நான் முன்பு குறிப்பிட்ட என் மகளின் ஆசிரியை அவ்வப்போது என்னை சந்தித்துப் பேசினார்கள். தன்னுடைய ஆவிக்குரிய அனுபவங்களை பகிர்ந்து கொள்ள விரும்பியது போலவே அவர்கள் வந்தாலும், யாதொரு வளர்ச்சியும் இல்லாமல், முன்பு இருந்தது போலவே பின்தங்கி வாழ்ந்தார்கள்!

> **உதாரணமாய், அந்த ஆசிரியை என் மகளுக்கு கற்றுத்தரவேண்டிய பாடங்களைக் குறித்து தந்தை லா - கோம்பே சில ஆலோசனைகளை கூறியபோது, உடனே மனம் புண்பட்டார்கள். அதுமுதல், என்னோடு கொண்டிருந்த சிநேகத்திலிருந்தும் சற்று குளிர்ந்து போனார்கள்.**

தேவனுடைய கிருபை அந்த சகோதரிக்கு அருளப்பட்டிருந்ததை நான் அறிவேன். அப்படியிருந்தும், சூழ்நிலைகளுக்கு அவர் பலியாவதைக் கண்டு வருந்தினேன். ஒருமுறை கர்த்தர் எனக்கு கொடுத்த வாய்ப்பை பயன்படுத்தி ‘அவர்கள் ஆவிக்குரிய விழிப்புணர்வு பெறுவதற்கு தடையாயுள்ள பகுதிகளை’ நான் சுட்டிக்காட்டினேன். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு பிரகாசம் அடைந்தார்கள். ஆகிலும், அவர்கள் என்மீது கொண்டிருந்த குளிர்ந்த தன்மையை விட்டுவிட மனதில்லாதிருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்!

இதற்கிடையில், இந்த ஆசிரிய சகோதரிக்கும், ஆசிரிய பணியாற்றிய என் தங்கைக்கும் இடையில் இருந்த மன வேறுபாடுகள் வலுத்துக்கொண்டே சென்றது. 7-வயது கொண்ட என் மகள், இந்த இரு ஆசிரியர்களிடம் தோன்றிய மன வேறுபாடுகளை அறிந்து கொண்டு **இருவரையும் பிரியப்படுத்த முயற்சித்தாள்.** உதாரணமாய், ஒரே பாடத்தை இந்த இரண்டு ஆசிரியர்களுக்காக இருமுறை எழுதுவாள். இறுதியில் அந்த ஆசிரிய சகோதரி ஒதுங்கிக் கொள்ள, நானும் என்

தங்கையும் கற்றுக் கொடுத்ததை என் மகள் படிக்கத் தொடங்கினாள்.

**என் தங்கையோ அடிக்கடி மனம் புண்படுகிறவளாய் இருந்தாள். அவளை வைத்து நான் கற்றுக்கொண்டது என்னவென்றால் "தெய்வ கிருபையை அதிக அதிகமாய் தொடர்ந்து பெறாமல், மற்றவர்களுடைய சுயத்தின் கிரியைகளை தாங்கிக்கொண்டு வாழ்வது கடினம்!" என்பதை அறிந்தேன்.**

என் தங்கையின் குறைவான குணாதிசயங்களை நானும் கூட தாங்கிக்கொள்ள சற்று தடுமாறினேன். ஆகிலும், நான் தேவனுக்குள்ளாய் எல்லோரையும் அன்புகூரக் கற்றுக்கொண்டதால் "தன்னையே எனக்காக தந்த" அவர், பிறருடைய தப்பிதங்களை தாங்கிக்கொண்டு அவர்களோடு மகிழ்ச்சியாயிருந்தது போலவே, 'இப்போதும்' இதுவரை இல்லாத சாந்தத்தையும் மனதுருக்கத்தையும் தேவன் எனக்கு கற்றுக்கொடுத்தார்!

பூரணமற்ற ஜனங்களுக்கு, தேவன் எனக்குத் தந்தருளிய திவ்ய பண்புகளைக் கொடுப்பதற்கு, எனக்கு எவ்வித சிரமமும் இருக்கவில்லை. ஆகிலும் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொண்ட ஆத்துமாக் களிடம் 'மனுஷீகத் தன்மையான பாசாங்குகளை' என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நல்ல விசுவாசிகள் போல் இருக்கும் இவர்கள் செய்திடும் 'நீண்ட வாக்குவாத உரையாடல்களில்' என்னால் கலந்து கொள்ளவும் முடியவில்லை.

**நான் உணர்ந்ததெல்லாம், மனுஷீகத் தன்மை நிறைந்த உரையாடல்கள், முடிவில் மனத்தாங்கலையே கொண்டு வரும் என்பதை நான் பார்த்திருக்கிறேன்!**

அதே சமயம், தேவன் தம்முடைய ஆவியின் மூலமாய் 'மனுஷீகத்தால் நிறைந்த சில நபர்களிடம்' பேசுவதற்கும் கொண்டு போய் விடுகிறார். ஆகவே, நான் தெளிவாய் கண்டதெல்லாம், **நான் தேவனுக்கு கீழ்ப்படிந்து** 'மனுஷீக - மோசம் நிறைந்த ஓர் நபரிடம்' நாள் முழுவதும் இருக்க வேண்டிய அவசியமிருந்தால், அதையும் நான் தெரிந்து கொள்வேன். இதற்கு மாறாக, என்னுடைய தெரிந்து கொள்ளுதலின்படி மிகச்சிறந்த நபரிடம், **என் விருப்பத்தின்படி** ஒரு மணி நேரம் அமர்ந்து உரையாடல் செய்வதை நான் புறக்கணிக்கிறேன்!

*ஒரு ஆத்துமா நடந்து கொள்ள வேண்டிய தெய்வ கட்டளையை "தேவனை சார்ந்து அர்ப்பணமாய் வாழும்" ஜீவியம் கொண்டவர்களுக்கே தேவன் வழங்குகிறார். அவர் அனுமதித்து வழங்கும் கட்டளைகள் 'சகலத்தையும் நேர்த்தியாகவும் சரியாகவும்' செய்து முடிப்பது மாத்திரமல்லாமல், அவையனைத்தும் தன்னை*

*நம்பி ஒப்படைத்த 'தேவனுடைய விருப்பத்தை' முழுமையாய் நிறைவேற்றி முடிக்கும்! அதன் மூலமாய், தேவனுடைய விருப்பம் நிறைவேறும் நிகழ்ச்சிகளுக்கு நேர்த்தியாக வழியை ஆயத்தம் செய்திடும்! தேவன் தம்முடைய சொந்த விருப்பத்தையும் (தெய்வ சித்தத்தையும்), தான் வழங்கிய உத்தரவையும் நேசித்திருக்கிறார். அவருடைய சித்தம், சிறந்த ஞானவான்களின் எண்ணப்படி இருப்பதில்லை!*

*ஞானவான்களின் கண்களுக்கு மறைத்து, தன்னுடைய உத்தரவின் படியான விருப்பங்களை 'தனக்கே தூய்மையுள்ளதாய்' தேவன் மறைத்து வைக்கிறார்!*

*- மேடம் குயான்*

---

## 'கர்த்தரை அறிந்தவர்கள்' மனுஷர் பயம் அற்றவர்கள்!

*சுயாதீன ஊழிய இரகசியம்*

கிறிஸ்து வனாந்திரம் சென்று, சோதனைகளில் வெற்றியடைந்து, மறுபடியும் யோர்தான் நதிக்கரை வந்து, **ஜனங்கள் நடுவில் தோன்றினார்.** அவர் தமது ஊழியத்தை ஆரம்பிக்கப்போகிறார். அதுசமயம், யோவான் ஸ்நானகன் அவரைக் கண்டு: ஜனங்களே, 'நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார்' என்று அறைகூவினார். 'நானும் இவரை அறியாதிருந்தேன்..... நானும் இவரை அறியாதிருந்தேன்' என்று துயரத்தோடு இருமுறை கூறி, தேவன் தனக்குக்கொடுத்த அடையாளத்தின் மூலமாக, **அவரை தேவகுமாரன் என்றறிந்து,** 'அவரைக் குறித்துச் சாட்சி கொடுத்து வருகிறேன்' என்று கூறினார். யோவானுடைய சாட்சியை யூத அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளவில்லை!

**'அறியப்படாதவராகவே' கிறிஸ்து அவர்கள் நடுவில் தோன்றினார். அவர்களுக்கு கடைசிவரை அறியப்படாதவராகவே போய்விட்டார்!**

அப்படியானால் கிறிஸ்துவைப்பற்றி யூத அதிகாரிகளுக்கு ஒன்றுமே தெரியாதா? அவர்களுக்கு எவ்வளவோ தெரியும். அவர் வளர்ந்த ஊர், பெற்றார், தொழில் முதலான காரியங்களை அறிவார்கள். அவர் செய்த போதனைகளையும் அற்புத கிரியைகளையும் அறிவார்கள். **இந்தப் புறம்பான அறிவு** அந்த யூதர்களுக்கு மாத்திரமன்று, அவரை இடைவிடாது பின்சென்ற திரளான ஜனங்களுக்கும் அந்த அறிவு இருந்தது! "நீங்கள் என்னை அறிவீர்கள், நான் எங்கேயிருந்து வருகிறேன் என்றும் அறிவீர்கள்" என்று ஆண்டவர் சொன்னது இந்தப் புறம்பான அறிவைப் பற்றித்தான்! இந்த புறம்பான அறிவு அவர்களை இரட்சிக்கவில்லை. அவரது பிறப்பு வளர்ப்பைப் பற்றிய குறைவான

எண்ணம் அவர்கள் கண்களைக் குருடாக்கினபடியால், தங்கள் நடுவில் வந்தவரை இன்னாரென்று அறியாமற் போனார்கள்!

**கிறிஸ்துவை மகாத்துமாவாக, அரிய போதகராக, அற்புத மூர்த்தியாக, சத்தியத்திற்காக உயிர் கொடுத்தவராக மாத்திரம் பேசுகிறவர்கள் அவரை அறிந்தவர்களல்ல! அவரை மாம்சத்தில் வந்த தேவனாக கண்டவர்களே அவரை அறிந்தவர்கள். 'நான் பிதாவாகிய தேவனிடத்திலும், பிதா என்னிலும் இருக்கிற இந்தத் தெய்வீக ஒற்றுமையை' அறிந்தவனே என்னை அறிந்தவன் என்றார் இயேசு!**

இந்த மேலான அறிவு யூதர்களுக்கு இருந்திருந்தால், அவர்கள் அவரைப் பாவி, பிசாசு பிடித்தவன், போஜனப்பிரியன், ஜனங்களை வஞ்சிக்கிறவன், தேவதூஷணம் பேசுகிறவன், ஓய்வுநாளை மீறுகிறவன் என்று பலவாறாய் அவரைத் தூஷித்திருக்கமாட்டார்கள்!

'கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்' என்று பிலாத்து கேட்டான். ஒன்று அவரை ராஜாவாக அவன் ஏற்றுக்கொண்டு பாத நமஸ்காரம் செய்ய வேண்டும், அல்லது அவரைச் சிலுவையிலறையும்படிக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். இதில், நடுநிலைமை கிடையாது. இப்போது, தேவன் தமது குமாரனை ஒவ்வொரு மனுஷனுக்கு முன்பாக நிறுத்தி '**நீ என் குமாரனை என்ன செய்யப்போகிறாய்?**' என்று கேட்கிறார். நான் இரண்டிலொரு பதில் சொல்லியாகவேண்டியது அவசியம். யூதர்கள் மறுத்து பதில் சொல்லிவிட்டார்கள். பிலாத்தும் மறுத்து சொல்லிவிட்டான். நாம் என்ன சொல்லுவோம்?

யூதர்களைப்பற்றி இதுவரை பேசினது போதும். கிறிஸ்தவர்களாகிய நம்மைப் பற்றி என்ன? நாம் கிறிஸ்துவை அறிந்திருக்கிறோமா? கிறிஸ்துவை அறியாமலா நாம் கிறிஸ்தவர்களாயிருக்கிறோம்? ஞானஸ்நானம் பெற்று, அப்பம்பிட்டு, ஆலயத்தில் ஆண்டவரைத் தொழுதுகொண்டு, மற்றவர்களுக்கு கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிற நம்மைப் பார்த்து இப்படி கேட்கலாமா? நாங்கள் கிறிஸ்துவைப்பற்றி எவ்வளவோ அறிந்திருக்கிறோமே என்று இன்றைய கிறிஸ்தவ மாந்தர்கள் சொல்லலாம்!.....

சபை போதகர் ஒருவர், வாய்திறந்து சத்தமாய் 'தெய்வத்தில் தெய்வமானாவர், ஜோதியில் ஜோதியானவர், மெய்தேவனில் மெய்தேவனானவர்' என்று சொன்னதை கவனித்தேன். ஆராதனை முடிந்தபின் அவர் கூடவே போய், "போதகரே! தெய்வத்தில் தெய்வம், ஜோதியில் ஜோதி, மெய்தேவனில் மெய்தேவன் என்று மகா உற்சாகமாய் சொன்னீர்களே, அது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

*என்று கேட்டேன். அதற்கு அவர் "எனக்கென்ன தெரியும்? அப்படிச் சொல்ல சொல்கிறார்களே, அவ்வளவுதான்" என்றார். சபையாருடைய காரியங்கள் அநேகமாய் அப்படித்தானிருக்கிறது. அது என்ன? அது எப்படி? என்று விசாரிக்கும் தெய்வ ஆராய்ச்சி குணம் நமக்கில்லை!*

**நம் 'மேதாவிகள்' கற்றுக்கொடுத்ததை கிளிப்பிள்ளைகளைப்போல் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இதனால் சபைகளில் ஞானவளர்ச்சி இல்லை. ஜீவியத்தில் மாறுதல் இல்லை. ஆவிக்குரிய விசாலமான பார்வை இல்லை. ஆண்டவரைப் பற்றிய அனுபவ அறிவில்லை!**

*தென் இந்தியாவில் ஓர் பெரிய ஆலயம். அங்கு நடக்கும் ஆராதனைகள் சடங்காசாரங்களோடு சேர்ந்து சிறப்பாகத் தோன்றும். அங்கே பிரசங்கிக்கும் போதகர், கல்வியிலும் வேத சாஸ்திரத்திலும், அதைவிட மேலாய் "தன் ஜீவியத்திலும்" கீர்த்தி பெற்றவர். ஜனங்களுக்குப் பிரயோஜனப்படத்தக்க விதமாய் எப்போதும் பிரசங்கிப்பார்! தேவ காரியங்களில் விசாலமான பார்வையுடையவர்.*

*ஒருநாள் அவர் பிரசங்கித்ததை* ***சபை பிஷப்*** *கவனித்து, ஆராதனை முடிந்தபின் ஒரு கடிதம் எழுதி: "நீர் உமது பிரசங்கத்தில் இயேசு என்றும், கிறிஸ்து என்றும் அடிக்கடி சொல்லுகிறீர். அது சரியல்ல. அதை இனிமேல் நிறுத்தி,* ***நமதாண்டவர்*** *என்றே எப்பொழுதும் சொல்லவேண்டும்" என கோபத்துடன் எச்சரித்தார். இதை வாசித்ததும் அந்தப்போதகர் கவலைகொண்டு, "நான் என்ன செய்வேன், எப்பொழுதும் நான் உபயோகித்த 'இயேசு' என்றும் 'கிறிஸ்து' என்றும் உபயோகித்த பதங்கள் வந்து விடுமே! நமதாண்டவர், நமதாண்டவர் என்று சொல்ல எனக்கு ஞாபகமிருக்குமோ? ஒருவேளை தவறி இயேசு கிறிஸ்து என்று சொல்லிவிட்டால் பிஷப் என்னைக் கண்டிப்பாரே" என்று மனம் சோர்ந்து வாடினார்.*

**பிஷப்பை பற்றிய பயமே அவர் மனதிலிருந்தபடியால், அவர் பிரசங்கத்தில் எப்போதுமுள்ள உயிரும் உற்சாகமும் அன்றுமுதல் அகன்றன! தேவனுடைய காரியத்தில் ஒரு மனுஷனுடைய இஷ்டப்படியே எல்லாரும் நடக்கவேண்டுமென்பது கொடிய அடிமைத்தனமேயன்றி வேறல்ல!**

இவ்விஷயத்தில் ரோம சபை மகா கண்டிப்புள்ளது. கத்தோலிக்க சபையைச் சேர்ந்த ஒருவரைப் பார்த்து: உங்கள் விசுவாசந்தான் என்னவென்று? கேட்டதற்கு, அவர்: **சபை என்ன போதிக்கிறதோ அதுதான் என் விசுவாசம்; அதற்குமேல் நமக்கென்ன?** என்றார்.

ஒருவருக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும், விளங்கினாலும் விளங்காவிட்டாலும், திருச்சபை சொல்வதற்கு மறுவார்த்தையின்றி கீழ்ப்படிய வேண்டுமென்பது, கத்தோலிக் சபையின் அதிகாரம். அந்த சபையைச் சேர்ந்த அரசு மருத்துவ டாக்டர் ஒருவர் எனக்குப் பழக்கம். ஒருநாள் நான் அவரைப் பார்த்து: உங்கள் ஆத்தும இரட்சிப்புக்காக என்ன செய்கிறீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர்: எனக்கு ஆஸ்பத்திரியிலும் வீட்டிலும் போதுமான வேலை இருக்கிறது. என் ஆத்தும காரியங்களை கவனிக்க எனக்கு நேரமில்லை. **அதை எங்கள் பிஷப் பார்த்துக்கொள்வார் என்றார்!**

எத்தனை குருக்களும், சாமியாரும், பிஷப்பும் நமக்கிருந்தாலும், எவ்வளவு சிறப்பான ஆராதனைகள் நடந்தாலும், **நாம் தனித்தனியே ஆண்டவருக்கு, உத்தரவாதிகளென்பதை மறக்கக்கூடாது.** மிஷனெரிகளோ, குருமார்களோ அவர்களுடைய ஜீவியமும் போதனைகளும் நமக்கு பிரயோஜமாயிருந்தபோதிலும் நாம் தனித்தனியே ஆண்டவரைத் தேடி அவரை அறிகிற அறிவில் வளரவேண்டுமென்பது தேவ சித்தமாயிருக்கிறது.

"அவனவன் தன் சரீரத்தில் செய்த நன்மைக்காகவது தீமைக்காகவது தக்க பலனை அடையும்படி நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்குமுன் வெளிப்பட வேண்டும்". அவ்வேளையில் நமக்காகப் பிணைப்பட்டு நம்மைத் தப்புவிக்க எந்த குருவாலும், சாமியாராலும், பிஷப்பாலும் முடியாது!

பிரியமானவர்களே, நீங்கள் 'கர்த்தரை அறிந்து வாழுங்கள்'. இல்லையென்றால், அந்த போதகன் பயந்தது போலவே, உங்கள் ஊழியத்திற்கும் பயம் ஏற்படுவது நிச்சயம்! நேர்மாறாக, கர்த்தரை தன் வாழ்வில் அறிந்தவன், "ஒன்றுக்கும் கவலைப்படாமல்" ஆசீர்வாதமாய் வாழ்ந்து, கர்த்தருக்கு கெம்பீரமாய் ஊழியம் செய்வான்!

- பரமானந்தம் ஐயர்

---

## அழைக்கப்பட்ட ஊழியனுக்கு தேவன் வழங்கும் அந்தஸ்து!

*தனக்கு உகந்த ஊழியனிடம் எஜமான் பிரியப்படுகிறார்*

எனது வாலிப பிராயத்தில், பக்த்சிங் ஆகிய நான் ஒரு இன்ஜினியராகி பணம் சம்பாதித்து, பணத்தை தேவனுக்கு கொடுப்பதே எனது வாஞ்சையாய் கொண்டிருந்தேன். ஆண்டவரோ, "எனக்கு உன் பணம் வேண்டாம், நீதான் எனக்கு வேண்டும்! ....நீதான் எனக்கு வேண்டும்!" என்றார். 1932ம் ஆண்டு ஏப்ரல் 4ம் தேதி, அதிகாலை 2.30 மணியளவில், ஆண்டவருடைய அழைப்பிற்கிணங்கி எனது

முழு வாழ்க்கையையும் ஊழியத்திற்கே அர்ப்பணம் செய்தேன். ஆண்டவரோ என்னைப் பார்த்து:

*__முதலாவதாக,__ பஞ்சாப்பிலுள்ள உனது சொத்துக்கள் யாவற்றின் மேலுள்ள உனது உரிமையை நீ விட்டு விட வேண்டும். ஒருபோதும், ஒரு மனிதனிடத்திலும், உன்னுடைய தேவைகளைப் பற்றிச் சொல்லவோ, ஆலோசிக்கவோ கூடாது.*

*__இரண்டாவதாக,__ எந்த ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனத்துடனும் ஒருபோதும் நீ சேர்ந்துகொள்ளக் கூடாது.*

*__மூன்றாவதாக,__ ஒருபோதும் உனது __சொந்த திட்டத்தை__ தீட்டக்கூடாது! என, எஜமானின் அந்தஸ்துக்குரிய மூன்று எச்சரிப்புகள் கொடுத்தார்!*

நான் இந்த மூன்று நிபந்தனைகளையும் மனதார ஏற்றுக் கொண்டேன். அந்த நாள்முதல், ஆண்டவர் எனக்கு ஊழிய கதவுகளைத் திறக்கத் தொடங்கினார். ஆம், என் இன்ஜினியர் கல்விக்காக சென்றிருந்த கனடா தேசத்தின் பின்தங்கிய கிராமிய இடங்களுக்கு தேவன் என்னை அனுப்பி, பாவ மாந்தருக்கு விடுதலையின் செய்தியை அறிவிக்கும்படி செய்தார்!

நான் இன்ஜினியராகப் பட்டம் முடித்தவுடன், மீண்டும் இந்தியா விற்குச் செல்லும்படி ஆண்டவர் பணித்தார். 1933 ஏப்ரல் 6-ம் தேதியில் நான் பம்பாய் சென்றடைந்தபோது,

**சீக்கிய மதத்தைச் சேர்ந்த நான், எனது கிறிஸ்தவ விசுவாசத்தை இரகசியமாகக் காத்துக்கொள்வதற்கு விருப்பமில்லாதவனாயிருந்த காரணத்தால், எனது தாயாரும் தகப்பனாரும் என்னைத் தங்கள் வீட்டிற்குவர அனுமதிக்க மாட்டார்கள் என்று அறிந்துகொண்டேன்!**

எனவே, பம்பாயிலேயே எனது ஊழியத்தை ஆரம்பித்தேன். எனது பெட்டியை ஒரு மறைவில் வைத்துவிட்டு, பட்டணத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று, சாலையிலே அனேகருக்கு கைப்பிரதிகளை விநியோகம் செய்ய ஆரம்பித்தேன். இந்தப் பணி, காலை தொடங்கி நள்ளிரவு வரை தொடர்ந்தது! விருப்பத்துடன் கைப்பிரதியை ஏற்றுக்கொண்டவர்களில் சிலர், “உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால், இந்த ஹோட்டலுக்குள் சென்று பேசுவோமா?” என்று கேட்பார்கள். அதற்கு நான் இணங்கி, ஹோட்டலில் உட்கார்ந்து இரட்சகரைப் பற்றி பேசுவோம். பிறகு அவர், ஒரு கோப்பை தேநீர் அருந்தும்படி கேட்டுக்கொள்வார்....

**அந்த தேநீர்தான் எனது காலை சிற்றுண்டி, மதிய உணவாயும், மாலை தேநீர் உணவாயும் இருக்கும்!**

ஆயினும் “பசியை நான் யோசிக்காத அளவிற்கு” அவைகள் மிகவும் மகிழ்ச்சியான நாட்களாயிருந்தன. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எனக்கு மிகவும் உண்மையாகவும் எனக்கு மிகவும் அன்பானவராகவும் தோன்றிய அந்த நாட்களுக்காக நான் தேவனைத் துதிக்கிறேன்!

அந்த நாட்களில், ஒரு சிறு பிள்ளையுடன் ஒரு பெண் என்னிடம் வந்து, தனது குழந்தைக்கு ஆடைகளும், காலணிகளும் வேண்டும் என்று கேட்டாள். அவளுடைய தேவைகளைப் பூர்த்திசெய்ய என்னிடம் ஒன்றும் இல்லாதபடியால், நான் தேவனிடம் கேட்டேன்.... ஜெபத்தைக் கேட்ட ஆண்டவர், என்னை ரயில் இருப்புப்பாதையைக் கடந்து செல்லுமாறு கூறினார். நான் அவ்வாறே நடந்து சென்றபோது, அங்கு ஒருவர் என்னிடம், சிறுபிள்ளைகளுக்கான ஆடைகளடங்கிய ஒரு பார்சலை எனக்குக் கொடுத்தார்: “இவைகள் எனக்கு இப்போது பிரயோஜனமாயில்லை. உங்களுக்கு இவைகள் தேவைப்படுமா?” என்று கேட்டார். நான் மகிழ்ச்சியோடு அந்தப் பார்சலைப் பெற்றுக் கொண்டு, அந்தப் பெண்ணிடம் கொடுத்தேன். அவள் அதைத் திறந்து பார்த்தபோது, அந்தப் பெட்டியில் அவளது சிறுபிள்ளைக்கான ஆடைகளும், அதன் கால் அளவிற்கு சரியான காலணிகளும் இருந்தன! அந்தப் பெண் அகமகிழ்ந்த காட்சி, கண்கொள்ளா காட்சியாய் இந்தது. எனக்கோ, கர்த்தர் என்னை முன்னும் பின்னுமாக நின்று **என்னைப் போஷித்து, என் தேவையெல்லாம் தந்து** உதவிய செயலால் பிரமித்துப் போனேன்!

இவ்வாறு என் ஊழியத்தின் ஒவ்வொருநாளும், வாரம் வாரமாக, மாதம் மாதமாக, வருஷம்தோறும்.... தமது வல்லமையான, திறமையுள்ள கரத்தால் தேவன் எவ்விதமாக என்னை நடத்தி வந்திருக்கின்றார் என்று நான் பரவசத்தோடு சொல்லிக்கொண்டே போகலாம். அன்றும், இன்றும், என்றும், எனக்கு அவர் மாறாதவராகவே இருக்கிறார்!

**ஆகவேதான், கர்த்தரால் அழைக்கப்பட்டு உத்தமமாய் பணிசெய்யும் ஊழியனே, எதிராளியானவன் உங்களை அதைரியப்படுத்த விட்டு விடாதீர்கள் என நான் உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன்! சில குறிப்பிட்ட காலம்வரை, நீங்கள் பல கஷ்டங்கள் ஊடாய் செல்ல நேரிட்டாலும், அதுவும் தெய்வீக நோக்கத்திற்காகத்தான் என்பதை மறவாதீர்கள்! என்னை நடத்திய அவரது வல்லமையுள்ள கரம் உங்களையும் வழிநடத்தட்டும்! அவர் ஒருபோதும் உங்களை கைவிடமாட்டார்!**

ஒவ்வொரு துன்பத்தின்போதும், **நீங்கள் அவரை உண்மையுள்ளவர் என்று கண்டுகொள்ள** உதவி செய்வாராக! எவ்வித சந்தேகமோ, பயமோ உள்ளே வர அனுமதியாதிருங்கள். ஆண்டவராகிய இயேசுவின் அன்பு ஒருபோதும் மாறிடாது! அவரைப் பின்பற்றி, அவரை நம்பி வந்த

உங்களை, அவருடைய வல்லமையான கரங்கள் வழிநடத்துகிறபடியே நடவுங்கள்!

உங்கள் மகிழ்ச்சியை ஒவ்வொருவருடனும் பகிர்ந்து கொண்டு, வேதம் உங்களுக்குச் சொல்லுகிறவைகளுக்கு கீழ்ப்படிந்து நடவுங்கள்! அதற்குரிய கிரயத்தை ஒருபொருட்டாய் நீங்கள் எண்ணாதிருந்தால், கர்த்தருக்கு கீழ்ப்படிவதாலுண்டாகும் சந்தோஷத்தைக் கண்டு கொள்வீர்கள்! என் அருமை உடன் ஊழியனே, இதுவே நீங்கள் காத்துக் கொள்ள வேண்டிய ஒரே ஒரு இரகசியம்! ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களைப் பத்திரமாக நடத்துவாராக! ஆமென்.

*- பக்த்சிங்*

---

## தேவனை சிநேகிதராக்கிய, ஆபிரகாமின் தாழ்மை!

*ஆபிரகாமை நோக்கிப் பார்த்திட அழைக்கும் ஆண்டவர்*

"தேவனுக்குச் சிநேகிதன்" என்று அழைக்கப்பட்ட முதல் நபர் ஆபிரகாம் தான்! சோதோம், கொமோரா நகர்களின் கொடிய பாவம் தேவனுக்கு கோப மூட்டியதை, ஆபிரகாமிடம் சொல்வதற்கு முன்பாக, தேவன் தமக்குள்ளேயே பேசிக்கொண்டது என்னவெனில், "நான் செய்யவிருப்பதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?.... நான் அவனை அறிந்திருக்கிறேன்" (ஆதி.18:17-19) என்பதுதான்! தேவனுடைய இவ்வார்த்தைகளின் அடிப்படையிலேயே ஆபிரகாம் "தேவனுக்குச் சிநேகிதன்" என அழைக்கப்பட்டார் என்று யாக்கோபு தன் நிருபத்தில் எழுதினார் (யாக்கோபு 2:23). **ஆபிரகாமுடன் தேவனுக்கிருந்த நெருக்கமான உறவு ஆச்சரியமானது!** இந்த உலக சினேகத்தில், "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" என்பார்கள். ஆனால், ஆபிரகாமைப் பொருத்தவரை அப்படியல்ல. அவர் ஆண்டவரை, அனைத்துலக "நீதியரசர்" என்றழைத்தார் (ஆதி 18:25). சோதோமுக்காய் மன்றாடுகையில், "ஆண்டவரே, உமக்குக் கோபம் வராதிருக்கட்டும்" என்று இருமுறை கேட்டுக்கொண்டார் (வச.30,32). தேவனுடன் நமக்கிருக்கும் ஐக்கியம் மற்றும் நெருக்கமானது, அவர் மீதுள்ள நமது பயபக்திக்குப் பங்கம் விளைவித்துவிடக்கூடாது!

விசுவாசிக்கிற அனைவருக்கும் "தந்தை" என்று ஆபிரகாம் அழைக்கப்படுகிறார் (ரோமர் 4:11). தேவன் அவரது பெயரை "ஆபிராம்" என்பதிலிருந்து "ஆபிரகாம்" என்று மாற்றிய கர்த்தருடைய வார்த்தைகளை நினைவில் வைத்து, பவுல் ஆபிரகாமை இவ்விதம் அழைத்தார். "நான் உன்னை எண்ணற்ற மக்களினங்களுக்குத் தந்தையாக்கினேன்" என்றே கர்த்தர் கூறியிருந்தார் (ஆதி.17:5).

"ஆபிராம்" என்றால் 'உயர்த்தப்பட்ட தந்தை' என்று பொருள்; "ஆபிரகாம்" என்றால் 'திரள் குடும்பத்திற்கு தந்தை' என்று பொருள். ஒன்று உயர்த்தப்படுதலையும், அடுத்தது விரிவாக்கப்படுதலையும் குறிப்பிடுகிறது!

*தேவனுக்குமுன் உத்தமமாய் நடப்பது ஆபிரகாமுடைய வாழ்க்கையின் செங்குத்துப் பரிமாணம் (வச.1); தேசத்தின் நீளமும் அகலமும் எவ்வளவோ, அவ்வளவு நடந்து திரிவது சம-தளப் பரிமாணம்! (13:17). அப்போஸ்தலனாகிய பவுலின் ரோமர் நிருபத்தில், ஒரு முழு அத்தியாயமே ஆபிரகாமுக்காய் ஒதுக்கப்பட்டுள்ளது (அதி.4). பழைய ஏற்பாட்டு தாசர்களில் எவருக்குமே புதிய ஏற்பாட்டில் இவ்வளவு முக்கியத்துவம் தரப்படவில்லை.* **புதிய ஏற்பாடும், இயேசுவின் வம்சவரலாறும் ஆபிரகாமில்தான் துவங்குகின்றன (மத்.1:1).** *தேவன் நம்மை, நமது வேலை அல்லது ஊழியத்தில் உயர்த்தும்போது, நமது திறமை மற்றும் உழைப்பினாலேயே இந்நிலைக்கு நாம் வந்துவிட்டோம் என்று நினைப்பது எளிது. நமது உழைப்பையும் ஆண்டவர் கனப்படுத்துகிறார் என்பது உண்மைதான்! ஆகிலும், அதனிமித்தமே நம்மை உயர்த்திவிட அவர் கடமைப்பட்டவரல்ல! விரும்பத்தக்க உயர்நிலைகளுக்கு நம்மைக் கொண்டு வருவது தேவ கிருபையே!*

**"தங்களது வேர்கள்"எங்கே என்பதைத் தெரிந்துகொள்ள இஸ்ரவேல் மக்கள், பழைய ஏற்பாட்டு அத்தனை தாசர்களிலும், ஆபிரகாமையே நோக்கிப் பார்க்க அழைக்கப்பட்டனர்.**

ஏசாயா 51:1,2, "நீதியை நாடுவோரே, ஆண்டவரைத் தேடுவோரே, எனக்குச் செவிகொடுங்கள்; நீங்கள் எந்தப் பாறையினின்று செதுக்கப்பட்டீர்களோ, எந்தக் குழியினின்று தோண்டப்பட்டீர்களோ, அதை நோக்குங்கள்! உங்கள் தந்தை ஆபிரகாமையும் உங்களைப் பெற்றெடுத்த சாராளையும் நினைத்துப் பாருங்கள். **தனியனாய் இருந்த அவனை அழைத்தேன்; அவனை ஆசீர்வதித்துப் பெரும் திரளாக்கினேன்**" என ஆண்டவர் பெருமிதம் கொண்டார்! பாருங்கள்:

*ஆபிரகாம் தனது பார்வையில் "தூசியும் சாம்பலுமாகவே" தெரிந்தார் (ஆதி.18:27). தேவனோ அவரைப் "பாறை" என்றழைக்கிறார்! 'மேன்மைக்கு முன்னானது தாழ்மை' (நீதி.15:33, 18:12) என்ற வசனத்தை ஆபிரகாம் மெய்யாக்கினார்!*

*- R.ஸ்டான்லி BYM*

## தனது அடிமையை, கர்த்தர் ஆதரிக்கிறார்!

*'அபிஷேகமே' கர்த்தரின் தாங்கும் கரம்*

*எங்கெல்லாம் மனுஷருடைய கிரியைகள் வேர் கொண்டதோ அங்கெல்லாம் குழப்பம் பின்தொடரும்! அவர்களின் 'மனுஷீக' சொந்த கிரியைகள் "அவர்களே வடிவமைத்த விக்கிரகங்கள்"* (Their molded images) *என, ஏசாயா 41:29-ம் வசனம் குறிப்பிட்டு, அந்த கிரியைகள் அனைத்தும் விருதாவும், புயல்காற்று உள்ளடக்கிய குழப்பமே என எச்சரிக்கிறது.* **"இதோ, அவர்களின்....** *விக்கிரகங்கள்" என துயரத்துடன் குறிப்பிட்ட 29-ம் வசனத்திற்கு நேர்மாறாக, அடுத்த வசனமோ* **"இதோ, நான் ஆதரிக்கிற** *என் தாசன் (அடிமை!)...." என தேவன் மகிழ்வுடன் கூறும் ஏசாயா 42:1-ம் வசனத்தைப் பாருங்கள்!* **"வியாதியை" குறிப்பிடும் வேத வாக்கியம், அதை "சுகமாக்கும்" மருந்தையும் குறிப்பிடுகிறது!** *ஒன்று நிலையற்ற மனுஷீக கிரியைகள்! மற்றொன்று நிலைத்துநிற்கும் சர்வ வல்லவரின் சித்தத்திற்கு உட்பட்ட கிரியைகள்!*

*உண்மைதான், சர்வ வல்லவர் தனது தாசனை (இயேசுவை) ஆதரித்து தாங்கியதற்கு காரணமென்ன? தேவனுக்கு அவர் தாசனாய் அல்லது அடிமையாயிருந்த காரணமேயாகும்! ஆம், அவர் தானாக யாதொன்றையும் செய்யாமல், தன் பிதாவாகிய எஜமான் கட்டளையிட்டவைகளை செய்திட்ட தாசன்! ஆகவேதான், எஜமானுடைய சித்தம் முழுவதையும் நிறைவேற்றி முடிக்கும்படி, தமது தாசனாகிய இயேசுவின்மீது* **'தமது ஆவியை அமரச் செய்து'... ஆதரித்து** *"இவரே என் தாசன்! என்றும், எனது நேசன்!" என்றும் கூறி அகமகிழ்ந்தார் (மத்.12:18). தன் சுய-இலட்சிய நோக்கோடு செய்திடும் யாதொரு சாதனையும் 'வீண்' பெருமையே எனக் கூறிய பவுல், தனக்காக யாதொன்றையும் செய்யாத கிறிஸ்துவின் மனத்தாழ்மையை நமக்கு முன்வைத்தார் (பிலி.2:3-5).*

எஜமானுக்கு தன் ஜீவகாலமெல்லாம் கீழ்படிந்திடும் ஓர் அடிமையை "இவன் தன் சுய லட்சியத்திற்காக ஒன்றைச் செய்தான்" என்று கூறிடக் கூடுமோ? அவ்வாறு நீங்கள் கூறியதை அந்த அடிமை கேட்டால் "சரிதான், போங்கள்!" என கூறி, எந்த பாதிப்பும் இல்லாமல், தன் ஊழிய பணியை செய்து கொண்டேதான் இருப்பான்! இயேசு அப்படித்தான் ஊழியம் செய்தார்!

*ஆகவேதான், பிதாவாகிய எஜமான் அவரைத் தன் வலது கரத்தால் "எல்லாவற்றிற்கும் மேலாக" உயர்த்தி ஆதரித்தார்! இயேசுவைப்போலவே, யாதொன்றிற்கும் தன் எஜமானின் கையையே நோக்கிப் பார்த்து வாழும் "முழு அர்ப்பண ஊழியராய்" நாம் மாறுவது எத்தனை பாக்கியம்!*

*- T.ரத்தினகுமார்*

## தேவனுடைய அப்போஸ்தலனாய் விளங்கிய நார்வே 'டெய்லர்'

# ஸிகார்ட் பிராட்லி



மிக வல்லமையான அப்போஸ்தலனாய் விளங்கிய ஸிகார்ட் பிராட்லி அவர்கள் தன் ஜீவ காலத்தில் 'டெய்லர்' என்றே தன்னை அழைத்துக்கொள்வார்! 1905-ம் ஆண்டு பிறந்த அவர் தன்னுடைய 9-வயதில் தேவனுக்கு தன்னை ஒப்புக்கொடுத்தார். தன்னுடைய 15-ம் வயதில் நார்வே 'ஆஸ்லோ' - புரூன்ஸ்டட் கிறிஸ்தவ சபைக்கு சென்ற நாள் தொடங்கி ஓர் பெரிய மாற்றம் ஏற்பட்டு கிறிஸ்துவின் சீஷனானார். "அன்று சத்தியத்தை கேட்டவுடன் ஒரு நிமிடம் கூட தாமதிக்காமல் என்னை இயேசுவின் ஊழியனாய் ஒப்புக்கொடுத்தேன்" என அவர் கூறினார். தனக்கு முன்னோடியாய் விளங்கிய எலியாஸ் அஸ்லாக்ஸன் சகோதரனோடு இரவு வெகு நேரம் சம்பாஷித்து, தன்னுடைய தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஊக்குவிக்கப்பட்டார். அவருடைய ஆவிக்குரிய வளர்ச்சி பல்லாண்டுகளாய் அமைதியாய் வளர்ந்தது. **தான் கற்றுக் கொண்ட அனைத்து சத்தியங்களையும் தன் ஜீவ காலமெல்லாம் கடைப் பிடித்து வாழ்ந்தார்!** ஆஸ்லோ சபைக்கு பொறுப்பேற்று கொண்ட நாள்முதல் "இயேசுவின் மரணத்தை பின்பற்றும் வாழ்க்கையை" மையப்படுத்தியே பேசுவார். அதை அடிப்படையாய் கொண்டு ஆஸ்லோ சபையின் முன் சுவரில் "உன்னைக் குறித்தும், உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தை கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்" (1தீமோ.4:16) என்ற வசனத்தை வைத்தார். அவர் அடிக்கடி சொல்வதெல்லாம் "நீங்கள் செய்திடும் யாதொன்றிற்கும் 'வேத வசனத்தின் ஆதாரம் உண்டா?' என கேட்பார். **"நீங்கள் செய்வது அனைத்தும் வேத வசன ஆதாரப்படி இருந்தால், நீங்கள் ஒருக்காலும் வழிதப்பிப் போக மாட்டீர்கள்!"** என அன்புடன் கண்டிப்பார். புரூன்ஸ்டட் சபையை சிறப்பாய் நடத்தி வந்த எலியாஸ் அஸ்லாக்ஸன் 1976-ம் ஆண்டு கர்த்தருக்குள் மரித்தவுடன், சபையின் தலைமை பொறுப்பெடுத்து நடத்தினார். தன்னுடைய மரண நாள் வரை பேரார்வத்தோடு ஊழியம் செய்தார். அவர் மரிக்கும்போது அவருடைய வயது 90. நல்ல ஆவிக்குரிய புத்தகங்கள் பல எழுதி, நார்வே, டென்மார்க், ஸ்வீடன் நாடுகளுக்கு மாத்திரமல்லாமல் ஐரோப்பாவின் எல்லா நாடுகளுக்கும், உலகமெங்கும் சென்று சீரும் சிறப்புமாய் ஊழியம் செய்தார். ஈரான் தேசத்து கூட்டங்களுக்கு சென்றபோது கைது செய்யப்பட்டு, **தன்னுடைய 73-ம் வயோதிபத்தில் சிறையில் அடைக்கப்பட்டார்.** சுமார் ஐந்து மாதங்களுக்குப் பிறகு நார்வே அரசாங்கம் தலையிட்டு விடுதலை பெற்றார். 1996ம் ஆண்டு மரித்த அவருடைய அடக்க ஆராதனையில் பெரும் ஜனத்திரள் கூடி வந்தார்கள். நார்வே அரசன் 'ஓலவ்' மரணத்திற்கு பிறகு, மிகப்பெரிய பரிசுத்தவான்களின் கூட்டம், அவரை நன்றியோடு கர்த்தரிடம் அனுப்பி வைத்தார்கள்.

*- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்*

# ஓ, வாலிபனே, இயேசு உன்னை அழைக்கிறார்!

"சாத்தான் ஒரு கைதேர்ந்த ஓவியன். அவன் பாவத்தை கவர்ச்சிமிக்க வண்ணங்களில் சித்திரந் தீட்டுகின்றான்" Santan is an artist, he paints sin in a very attractive colours என்று ஒரு பக்தன் கூறினார். எத்தனை உண்மையான வரிகள் அவை! நம்முடைய கண்கள் காணும் தேவனுக்குப் பிரியமற்ற காட்சிகளையும், மனதில் தோன்றும் அசுத்த எண்ணங்களையும் பிசாசு தனது கைவன்மையால் நேர்த்தியாகச் சித்திரம் வரைந்து நமது கண்களுக்கு முன்பாக திரும்பத் திரும்பக்கொண்டு நிறுத்தி, நம்மைப் பாவம் செய்ய வழிநடத்திச் செல்லுவான். மனதில் தோன்றும் எண்ணங்களைக் குறித்து பரிசுத்த அகஸ்டின் பேசுகையில் "உனது மனதில் தோன்றும் எண்ணங்களைக் கருத்துடன் காவல் செய், ஏனெனில் அவைகள் பரலோகத்தில் வாசிக்கப்படுகின்றன" என்றார் (Guard your thoughts for they are read in Heaven).

பாவ உலகிலே மானிடனாகப் பிறந்த எந்த ஒரு மனிதனும் மாம்ச இச்சைகளினால் (பாலிய மோகத்தால்) பெரிதும் தாக்கப்படுகின்றான். ஆதாம் பாவத்தில் வீழ்ச்சியுற்றதும் "அந்த மாம்ச கனியை ஏவாள் புசித்ததே அல்லாமல்" வெறும் மரத்தின் கனி அல்ல என்று நான் சிறுவனாக இருந்தபோது ஒரு விருத்தாப்பிய பிரசங்கியார் கூறிய வார்த்தை என் நினைவுக்கு ஓடோடி வருகின்றது. ஒரு சிலருக்கு பிறப்பிலேயே அந்த ஆசைகள் இருப்பதில்லை. ஆனால் பெரும்பாலோர், இந்த சிற்றின்ப ஆசைகளுக்கு அடிமைப்பட்டே வாழ்கின்றனர். 'மாம்ச ஆசை' இச்சைகளின் கோரப் புயலால் சிக்கி சீரழித்த சின்னாபின்னாமான வாழ்வுகளை வேதாகமம் நமக்கு எச்சரிக்கையாக தன்னகத்தே வைத்துக் கொண்டிருக்கின்றது.

சிற்றின்ப மாம்ச இச்சைகள் என்ற லிவியாதானுக்கு முன்பாக யாரால் நிற்கக்கூடும்? "இதோ, அதைப்பிடிக்கலாம் என்று நம்பினவன் மோசம் போய், அதைப் பார்த்தவுடன் விழுவான் அல்லவா?" (யோபு 41:9). அரண்மனை உப்பிரிக்கையிலிருந்து அதைப் பார்த்த தாவீது அரசன் விழுந்தான் அல்லவா? இஸ்ரவேல் புத்திரரை சத்துருக்களின் கரங்களிலிருந்து மீட்டு இரட்சிக்க கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட பராக்கிரமசாலியான சிம்சோன் அந்த லிவியாதானைக் கண்டதும் சாய்ந்து வீழ்ந்தான் தானே? ஓ வாலிபனே, கவனம்! உன் பாவங்கள் எத்தனையோ..... அவை அனைத்தையும் மன்னித்து புதுவாழ்வுதர, இயேசு உன்னை அழைக்கின்றார்!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**